IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.200/2023
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்:12.30 p.m.

வா.சா. 1 சாட்சி  சாலமோன்ராஜா  த.பெ.தவராஜ்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 04.07.2025 in accordance with the provisions of Act XX141.**

1,3பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு  விசாரணை :

1. வாதிகள் நான்குபேரும் தவராஜின் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி எனது தந்தையின் தந்தை பெயர் எட்வர்டு பால்ராஜ் ஆகும். எனது தாத்தாவுடன் பிறந்தவர்கள் எனது தாத்தாவையும் சேர்த்து 3பேர்கள் என்றால் சரிதான். எனது தாத்தா எட்வர்டு பால்ராஜ்தான் மூத்தவர் என்றால் சரிதான். அவருக்கு அடுத்த சகோதரர் பெயர் சின்னச்சிவணான்டி என்றால் சரிதான்.

2. மேற்படி சின்னச்சிவணான்டிக்கு 5பிள்ளைகள் என்றால் சரிதான். அவர்களில் 1முதல் 4 பிரதிவாதிகள் உயிருடன் உள்ளார்கள் அவர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன். தாகூர் என்பவர் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். சின்னச்சிவணான்டிக்கு அடுத்த சகோதரர் பெயர் துரைச்சாமி என்றால் சரிதான். மேற்படி துரைச்சாமியின் மகன் 4பேரும் இறந்துவிட்டார்கள் அவர்களுடைய மனைவி மற்றும் மக்கள் உயிருடன் உள்ளார்கள் என்றால் சரிதான்.

3. எனது தாத்தா எட்வர்டு பால்ராஜ் அவருடன் பிறந்த சகோதரர்களான சின்னச்சிவணான்டி, துரைச்சாமி ஆகிய 3பேரும் இறந்துவிட்டார்கள். மேற்படி 3பேரின் தந்தை பெயர் ம.சி.மாயாண்டி

என்றால் சரிதான். சர்வே எண் 90/14A ல் கட்டுப்பட்டது 14 செண்டு என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 90/14ல் மொத்தம் எத்தனை செண்டு கட்டுப்பட்டுள்ளது என்றால் 42 செண்டு ஆகும். மேற்படி 42 செண்டு மற்றும் சிலசொத்துக்கள் எனது தாத்தாவின் தந்தை ம.சி.மாயாண்டி என்பவருக்கு ஆதியில் பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

4. தாவா சர்வே எண்ணில் கட்டுப்பட்ட சொத்துக்கள் தவிர வேறு எத்தனை சொத்துக்கள் இருந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ம.சி.மாயாண்டி இறந்தபிறகு அவருடைய பிள்ளைகள் அவருடைய சொத்துக்களை எவ்வாறு பாகம் செய்து கொண்டார்கள் என்ற விபரமும் தெரியாது என்றால் சரிதான். தாவா வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு மதுரை மாவட்ட வருவாய் அலுவலகத்தில் தாவாச் சொத்து தொடர்பாக விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான்.

5.மேற்படி விசாரணையில் எனது தரப்பில் நான் ஆஜரானேன் எனது தாயாரும் வந்திருந்தார். மாவட்ட வருவாய் அலுவலகத்தில் இருதரப்பினர்களையும் விசாரித்துதான் உத்தரவு பிறப்பித்தார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 மனுவானது 1ம்பிரதிவாதியால் 6ம்பிரதிவாதி அலுவலகத்தில் சமர்பிக்கப்பட்ட மனு என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 மனு எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் எனக்கு தெரியாது எனது அம்மாதான் வழக்கை தாக்கல் செய்தார். ( வா.சா.ஆ.2 ஆவணமானது 1ம்பிரதிவாதி மாவட்ட வருவாய் அலுவலர் அவருக்கு அனுப்பிய மனுவாக உள்ளது. மேற்படி மனுவில் 1ம்பிரதிவாதியின் கையெழுத்து உள்ளது)

6. 1ம்பிரதிவாதியால் 6ம்பிரதிவாதியிடம் வழங்கிய வா.சா.ஆ.2 மனுமீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின்பேரில்தான் வா.சா.ஆ.1 உத்தரவு

பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் காணப்பட்டுள்ள எதிர்மனுதாரர் தரப்பான எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது அம்மாவுக்குத்தான் தெரியும். வா.சா.ஆ.1 உத்தரவை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன்.

7. வா.சா.ஆ.1 உத்தரவில் தாவாச் சொத்து தொடர்பான நிலஉடமை மேம்பாட்டுத்திட்டத்திற்கு முந்தைய ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சர்வே எண் 90/14ல் கட்டுப்பட்ட 42 செண்டு என்பது 13 செண்டு ஒரு உட்பிரிவாகவும், 14 செண்டு ஒரு உட்பிரிவாகவும், 15 செண்டு ஒரு உட்பிரிவாகவும் பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. தாவா சர்வே எண்ணில் வடகடைசியில் எனது தந்தைக்கும், தெற்குகடைசியில் துரைச்சாமிக்கும், நடுமையம் சின்னச்சிவணான்டிக்கும் ஒதுக்கப்பட்ட சொத்தாகும். வா.சா.ஆ.1ல் 9ம்பக்கத்தில் எனது தாத்தா எட்வர்டு பால்ராஜ் மனைவி பொன்னம்மாள் பெயரில் சர்வே எண் 90/14Cல் 13 செண்டு பட்டா ஏற்பட்டுள்ளதாகவும், சர்வே எண் 90/14Bல் 15 செண்டு துரைச்சாமி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதாகவும், சர்வே எண் 90/14Aல் 14 செண்டு ம.சி.சிவணான்டி என்ற பெயரிலும் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9. மேற்படி பட்டா ஏற்பட்டது UDRக்கு முன்பாக ஏற்பட்டது என்றால் சரிதான். அதில் 1976ம் ஆண்டு ஆவணத்தில் கண்டுள்ள விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண் 90/14Aல் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் எனது தாத்தா பெயரிலும், அவருக்கு பின்னிட்டு எனது தந்தை பெயரிலும், அதற்கு பின்னிட்டு எங்கள் பெயரிலும் பட்டா ஏற்பட்டுள்ளது.

எனது தாத்தா பெயரில் உள்ள பட்டா சம்மந்தமான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

10. வழக்குச் சொத்தில் எனது தாத்தா அனுபவம் செய்ததற்கு ஆதரவாக கிஸ்தி இரசீது தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. கடந்த 50 ஆண்டுகளாக வழக்குச் சொத்தை அனுபவம் செய்ததற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்தேனா என்றால் வா.சா.ஆ.5 கிஸ்தி இரசீதுகளை தவிர வேறு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. தாவாச் சொத்துக்களை தவிர மற்ற இலக்கச் சொத்துக்கள் யார்யார் பெயரில் உள்ளது என்றால் கூட்டுப்பட்டாவாக உள்ளது. அதன்படி எனது பெற்றோர்கள் தவராஜ், தேவிபானுமதி பெயரும், எனது பெயர் மற்றும் எனது சகோதரர்கள் பெயரும் உள்ளது. ( சாட்சி பின்னிட்டு தானாக எனது தந்தை பெயரும், 1ம்பிரதிவாதியின் தந்தை பெயரும் உள்ளது என்றார் பின்னிட்டு 1ம்பிரதிவாதி பெயரில் உள்ளது என்றார்)

11. வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பிராது, எதிர்வழக்குரை மற்றும் நிரூபணவாக்குமூலம் படித்து தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். பிராது பத்தி 5ல் 1ம்பிரதிவாதியின் தந்தை சின்னச்சிவணான்டி என்பவருக்கு வாய்மொழியாக கிடைத்த பாகப்படி சர்வே எண் 90/12ல் 0.06.50 ஏர்ஸ் நிலமும் மற்றும் சர்வே எண் 90/9ல் 0.07.50 ஏர்ஸ் நிலமும் மற்றும் சர்வே எண் 90/12ல் 0.12 செண்டு நிலமும் கிடைக்கப்பெற்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது சரிதானா என்றால் சரிதான். மேற்படி 3சர்வே எண்களில் உள்ள சொத்துக்கள் தான் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்று நான் கூறுகிறேன் என்றால் சரிதான்.

12. மேற்படி 3 புலஎண் சொத்துக்களும் பிரதிவாதிகளுக்கு வாய்மொழியாக பாகம் கொடுத்துவிட்டதாக நான் கூறியுள்ளேன் என்றால்

எனது தாத்தா காலத்தில் பாகம் பிரித்துக் கொடுக்கப்பட்டது எங்கள் பெயரிலும் கூட்டுப்பட்டா உள்ளது. மேற்படி பாகமானது எங்கள் அனைவருக்கும் சேர்த்து கொடுத்தது ஆகும். எனது பிராதிலும், நிரூபணவாக்குமூலத்திலும் வழக்கு விபரங்களையும் சங்கதிகளையும் தெளிவாக குறிப்பிடவில்லை என்றால் எனக்கு தெரியாது எனது அம்மாவுக்குத்தான் தெரியும்.

13. வழக்கில் எனது தாயாரை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் வயதின் காரணமாக அவர் படுத்தபடுக்கையாக உள்ளார் அதனால் விசாரிக்க முடியாது. வழக்குச் சொத்து சம்மந்தமாக மாவட்ட வருவாய் அலுவலரின் உத்தரவிற்கு பின்னிட்டுதான் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா வழக்கில் விளம்புகை பரிகாரம் கேட்காமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்னரும் வழக்குச் சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கேட்க நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

14. 7ம்பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையின் விபரம் தெரியும் என்றால் சரிதான். 7ம்பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் நிலஉடமை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் உரிய விசாரணை செய்துதான் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் உரிய விசாரணை செய்யவில்லை என்பதால் வழக்கில் சேர்த்துள்ளேன். 6ம்பிரதிவாதி தரப்பில் UDRகாலத்தில் ஏற்பட்ட விசாரணையில் தவறுதலாக புலஎண்கள் 90/14A, 90/14B, 90/14Cக்கு எனது தந்தை பெயரில் பட்டா

ஏற்படுத்திவிட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி UDRக்கு முந்தைய நிலவரப்படி பட்டா பெயர்மாற்றம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

15.தாவாச் சொத்து சம்மந்தமான வில்லங்கச்சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவாச் சொத்துக்கள் சம்மந்தமாக எனது தாத்தா பெயருக்கு அவரது உடன் பிறந்தவர்கள் பதிவு கிரைய ஆவணங்கள் ஏற்படுத்தி கொடுத்துள்ளார்களா என்றால் பதிவு செய்யாத கிரைய ஆவணங்கள் கொடுத்துள்ளார்கள். மேற்படி பதிவு செய்யாத கிரைய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

16. UDR காலத்தில் இருந்த பட்டாவை அடிப்படையாக கொண்டுதான் வா.சா.ஆ.6 பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். UDR காலத்தில் தவறான பட்டா வழங்கப்பட்ட நிலையில் வா.சா.ஆ.6 ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.4 பட்டா மற்றும் அ பதிவேடு UDRதிட்டத்தில் ஏற்பட்டதுதான் என்றால் சரிதான். தாவாச் சொத்து சம்மந்தமாக நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 ஆவணங்களை தவிர வேறு ஆவணம் என்னிடம் இல்லை என்றால் சரிதான்.

17. சர்வே எண் 90/14ல் 1ம்பிரதிவாதிக்கும் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. நான் தவறான விபரங்களை கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா வழக்கில் விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்பதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. தாவாச் சொத்து எங்களின் அனுபவத்தில் இருப்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8

ஆவணங்கள் மூலம் எனது பிராது பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிராது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்:1.30p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.07.04 15:36:47 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.